செ.வெ.எண். 05 நாள்.04.12.2017.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட அளவில் நடைபெற்ற பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற 18 மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் ரூ.1.32 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.12.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்ட அளவில் பள்ளிகளுக்கிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதை போட்டிகள் நடத்தப்பட்டது. இதில், வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு முதற் பரிசாக ரூ.10 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழினையும், இரண்டாம் பரிசாக ரூ.7 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழினையும், மூன்றாம் பரிசாக ரூ. 5 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழினையும் வழங்கினார்.

மாவட்ட அளவில் கல்லூரிகளுக்கிடையே தமிழில் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டது. இதில், வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு முதற் பரிசாக ரூ.10 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழினையும், இரண்டாம் பரிசாக ரூ.7 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழினையும், மூன்றாம் பரிசாக ரூ. 5 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழினையும் வழங்கினார். ஆக மொத்தம் பள்ளி மற்றும் கல்லூரி அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற 18 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.32 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்ள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித்தலைவர் திருமதி.மைதிலி, மண்டல தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் முனைவர்.சு.பசும்பொன் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.